**Starting Time: 01.00 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 128/2019**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 06.06.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கலியமூர்த்தி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>சாட்சிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதின் பேரில், சாட்சி ஆஜராகி வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : நான் கடந்த 10 மாதங்களாக கிழக்கு ராஜாபாளையத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். கிராம நத்தம் புல எண். 271/14 கிராம கணக்கில் என்னவாக பதிவாகியுள்ளது என்றால், நத்தமாக பதிவாகியுள்ளது. அதன் விஸ்தீரணம் 19-3/4 செண்ட். அந்த இடம் ராமசாமி மனைவி ஜெயக்கொடி, வேலாயுதம், விநயத்த உடையார் மக்கள் குழந்தைவேல், பொன்னுசாமி, பன்னீர்செல்வம், கந்தவேல், மூக்கன் செட்டி மகன் பெரியசாமி, ராமலிங்கம் மனைவி வள்ளியம்மை ஆகியோர் பெயர்களில் பதிவாகியுள்ளது.

2. இந்த வழக்கின் வாதி மேற்படி புல எண்ணில் 16 செண்ட் நிலத்திற்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 16 செண்ட்டிற்கு தென்புறத்தில் தங்கவேல் இடம் இருந்து பிரதிவாதிகள் பன்னீர் செல்வம் நிலத்திற்கு தென்புறத்தில் 2 செண்ட் நிலம் கிரயம் வாங்கியுள்ளார்கள். அந்த 16 செண்ட்டில் வாதியின் வீடும், காலி இடமும் உள்ளது. தாவா புல எண்ணின் சிட்டா, அடங்கல் மற்றும் புல வரைபடத்தினை தாக்கல் செய்கிறேன். அது **<u>Ex.X1, Ex.X2. Ex.X3</u>** ஆக குறீயீடு செய்யப்படுகிறது.

Ending time: 01.09 P.M.

**ஒப்பம்/- என். திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**